நீர்வளத்துறை

அனுப்புனர்
பொறி.இரா.மணிமோகன்,பி.இ, எம்.பி.ஏ.,
செயற்பொறியாளர், நீவது
ஆற்றுப்பாதுகாப்பு கோட்டம்,
திருச்சி-1.

பெறுநர்
திரு.A.சண்முகம்
த/பெ.அப்புலிங்கம்பிள்ளை
B/B, தில்லைநகர் மேற்கு விஸ்தரிப்பு
திருச்சி.

கடிதம் எண் : 138 / 2021 / கோ. 30 TC / வ1 / நாள் : 01.02.2022

அன்புடையீர்,

பொருள் : பாலம்- திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், கூத்தூர் கிராமம், பெருவளை வாய்க்காலில் பிரியும் பாசன வடிகால் வாய்க்கால் மற்றும் பழைய பெருவளை வாய்க்காலில் பிரியும் பள்ளிவிடை பாசன வாய்க்கால் குறுக்கே புதிய பாலம் அமைக்க அனுமதி வழங்குதல் தொடர்பாக.

பார்வை : 1. தங்களது மனு நாள் : 09.02.2022.
2. உதவி செயற்பொறியாளர், நீ.வ.து., ஆ.பா.உபகோட்டம், லால்குடி. க.எண் : கோ.27/ 2021/ நாள் : 23.02.2022

****

பார்வை 1-ல் காணும் தங்களது கடிதத்தில் திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், கூத்தூர் கிராமம், புல எண்: 154/2A , 154/2B, 155/2A1, 155/2A2,155/2C, 155/2C2, 155/2D, 155/2E, 157/3, 157/4A, 157/4B, 157/5B மற்றும் 159/3B-ல் உள்ள நிலத்திற்கு சென்று வர வேறுபாதை இல்லாத காரணத்தினால் பெருவளை வாய்க்காலில் பிரியும் பாசன வடிகால் வாய்க்கால் மற்றும் பழைய பெருவளை வாய்க்காலில் பிரியும் பள்ளிவிடை பாசன வாய்க்கால் குறுக்கே புதிய பாலம் அமைக்க அனுமதி கோரியுள்ளீர்கள்.

மேற்காணும் பொருள் தொடர்பான இடம் பார்வை 2-ல் காணும் உதவி செயற்பொறியாளரால் தள ஆய்வு செய்யப்பட்டதில் பாலம் அமைவிடப்பகுதியானது திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், கூத்தூர் கிராமம், மேற்குறிப்பிட்ட புல எண்களில் உள்ள நிலத்திற்கு சென்று வர வேறு பாதை இல்லாத காரணத்தினால் பெருவளை வாய்க்காலில் பிரியும் பாசன வடிகால் வாய்க்கால் மற்றும் பழைய பெருவளை வாய்க்காலில் பிரியும் பள்ளிவிடை பாசன வாய்க்கால் குறுக்கே இரண்டு புதிய பாலங்கள் கட்ட அனுமதி வழங்க பரிந்துரை செய்து அறிக்கை பெறப்பட்டது. ஆகவே உதவி செயற்பொறியாளர் அவர்களின் பரிந்துரையின் பேரில் மேற்படி இரண்டு பாசன வாய்க்கால்களின் குறுக்கே தங்களது சொந்த செலவில் பாலம் அமைக்க கீழ்காணும் நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள் :

1) பாலம் அமைப்பதை மனுதாரர் தனது சொந்தசெலவிலேயே அமைத்துக்கொள்ள வேண்டும்
2) இந்த பாலமானது பாசன வடிகால் மற்றும் பள்ளிவிடை பாசன வாய்க்கால்களின் படுக்கை மட்ட அளவான 4.00 மீட்டர் அகலத்திற்கு குறையாமலும், வாய்க்காலின் தரை மட்டத்திலிருந்து பாலத்தின் கான்கிரீட் பலகையின் அடிப்பாகம் (Bottom of Deck Slab) 1.20

மீட்டர் உயரத்திற்கு குறையாமலும், வாய்க்காலின் நடுவே எவ்வித தூண்கள் இல்லாமலும் அமைக்கப்பட வேண்டும்.

3) பாலம் பொதுப்பணித்துறையால் நிர்ணயிக்கப்பட்ட வடிவமைப்பு மற்றும் கட்டுமான அமைப்பின்படி கட்டப்பட வேண்டும். பாலம் கட்டுமானம் பணியின் பொழுது இத்துறை அலுவலர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட வேண்டும். கட்டுமான பணியின் பொழுது இத்துறை கணப்பணியாளர்கள் முன்னிலையில் பணி மேற்கொள்ளுதல் வேண்டும்.

4) பாலம் அமைக்கும் பொழுதும், பயன்பாட்டில் உள்ள பொழுதும் வாய்க்காலின் நீரோட்டத்திற்கு எவ்வித தடையும் ஏற்படா வண்ணம் அமைத்தல் வேண்டும். மண்திட்டுகள், இடிபாடுகள், செடிகொடிகள் ஏதுமின்றி தொடர்ந்து பராமரித்தடல் வேண்டும்.

5) பாலம் அமைக்கும் நிலையில் வாய்க்காலின் கட்டிட கட்டுமானங்களுக்கு எவ்வித சேதமும் ஏற்படாவண்ணம் அமைத்தல் வேண்டும். பாலம் கட்டும் பொழுது இருபுறம் கைப்பிடி சுவர்கள் பாதுகாப்பான நிலையில் அமைத்தல் வேண்டும். இரண்டு பாலங்கள் அமைவிடப்பகுதியான 234x2=468 சதுர அடி பகுதிக்கு ஆண்டு தோறும் தரைவாடகை செலுத்தப்பட வேண்டும். பதிவுத் துறை ஆவணங்களின் அடிப்படையில் தற்போது நிர்ணயிக்கப்படும் Guideline விலைவிகித அடிப்படையில் தரைவாடகை ஒரு பாலத்திற்கு ரூ.1,906/- வீதம் இரண்டு பாலத்திற்கு ரூ.3812 நடப்பாண்டிற்கு செலுத்தவேண்டும். மேலும் ஒவ்வொரு பசலி ஆண்டும் அரசு நிர்ணயிக்கும் தொகையினை பசலி ஆண்டு தொடங்கும் முன்னரே இத்துறைக்கு ரொக்கமாகவோ, தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் கேட்பு வரைவோலையாகவோ செலுத்துதல் வேண்டும்.

6) காப்புத்தொகையாக ரூ.20,000 X 2=40,000 செலுத்தப்பட வேண்டும்.

7) பாலம் கட்டி முடிக்கப்பெற்றவுடன் அதன் மூலம் எவ்வித உரிமையும் கொண்டாட கூடாது. பாலத்தினை பொதுப்பணித்துறையின் வசம் ஒப்படைக்க வேண்டும். இப்பாலத்தை பிறபொதுமக்கள் உபயோகிக்க எவ்வித ஆட்சேபணையும் எழுப்பக்கூடாது.

8) இப்பாலம் குறித்து ஏதேனும் சட்டம்-ஒழுங்கு பிரச்சனை ஏற்பட்டாலோ, அரசுக்கு இடையூராக அமையும் நிலை ஏற்பட்டாலோ அல்லது மேற்கண்ட நிபந்தனைகள் ஏதும் மீறப்பட்டாலோ முன் அறிவிப்பன்றி இவ்வனுமதி உடனே இரத்து செய்யப்படும்.

9) மேற்கண்ட நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டது குறித்து மனுதாரர் ரூ.20/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் எழுத்து மூலம் அளிக்க வேண்டும்.

1/3/22

செயற்பொறியாளர், நீவது., திருச்சி
ஆற்றுப்பாதுகாப்பு கோட்டம், திருச்சி.

1/3/22